முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

OS.NO.79/2021

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | : | 2 |
| பெயர் | : | **நிஜாம் அலி** |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை:**

நான் சிங்கம்புணரி தேத்தங்காட்டில் குடியிருந்து வருகிறேன். எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். எனக்கு பிரதிவாதி சக்திவேலை கடந்த 20 வருடங்களாக தெரியும். அவர் சிங்கம்புணரியில் நகை பட்டறை வைத்துள்ளார். அப்துல்காதர் சென்னாரம்பட்டியில் மீன் வியாபாரம் செய்து வருகிறார். அவரை எனக்கு சக்திவேல் மூலமாகத்தான் பழக்கம். 2019 மார்ச் மாதம் 15ம் தேதி என்னை சக்திவேல் போனில் தொடர்புகொண்டு சிங்கம்புணரி காமாட்சியம்மன் கோவில் பக்கத்தில் தனக்கு 10செண்ட் நிலம் இருப்பதை தான் மீன்வியாபாரிக்கு அப்துல்காதருக்கு விற்பதாக சொல்லி சாட்சி கையொப்பம் போடுவதாக சொல்லி சிங்கம்புணரி சார்பதிவளார் அலுவலகத்திற்கு வரச்சொன்னார். காலை 10.30 மணிக்கு நான் சென்றேன். 10,10,000/-க்கு கிரையம் செய்து தருவதாக விலை பேசி, பத்திர பதிவு செலவு அதிகமாக இருப்பதால் தன்னால் கிரையம்செய்யமுடியாது என மீன்வியாபாரி அப்துல்காதர் சக்திவேலிடம் சொல்லி 2வருடம் அவகாசம் ஒப்பந்தத்தில் போடப்பட்டது. பத்திர அலுவலகத்தில் கையெழுத்து போடப்பட்டது. எனக்கு முன்னால் செல்வம் என்பவர் சாட்சி கையொப்பம் போட்டார்.

அப்துல்காதரிடமிருந்து சக்திவேல் 10,00,000/- பெற்றுக்கொண்டு தனது தாய் பத்திரத்தை சக்திவேல் அப்துல்காதரிடம் ஒப்படைத்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வேறு எதுவும் நான் பார்க்கவில்லை.

**நீதிமன்றகேள்வி:**

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.20 16:01:10 +0530

பத்திரம் எங்கு தயாரிக்கப்பட்டது, எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

**பிரதிவாதி  தரப்பு குறுக்கு விசாரணை:**

வாதியின் மகன் பெரோஸ்கான் எனக்கு 4, 5 வருடங்களாக பழக்கம் களன்றால் சரிதான். அவர் அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான். கையெழுத்து போடச்சொன்னதன்பேரில் நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். வாதியின் மகனும் அவரது நண்பரும் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் பிரச்சனை உள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியாது. எனது அடையாள அட்டை என்னால் தாக்கல் செய்யமுடியும்.

பிரதிவாதி தனது சொந்த தேவைக்காக வாதியின் மகன் பெரோஸ்கான் மற்றும் அவரது நண்பர் அஜ்மீர்கலஞ்சியம் இருவரிடமிருந்து பணம்கடன் வாங்கியிருந்தார் என்றும் அந்த கடனை வட்டியுடன் திரும்ப செலுத்திவிட்டார் என்றும் அந்த கடன் தொகைக்காகத்தான் பிரதிவாதியை மிரட்டி இராமநாதபுரம் தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10லட்சம் ரூபாய் பணத்தை என் முன்னிலையில் பையில் போட்டு சார்பதிவாளர் அலுவலத்தில் பக்கதில் உள்ள அலுவலகத்தில் வாதி பிரதிவாதியிடம் ஒப்படைத்தார். நான் கையெழுத்திட்ட கிரைய ஆவணத்தில் என்ன சரத்துக்ள உள்ளது என படித்துப்பார்க்கவில்லை. வாதியின் மகன் பெரோஸ்கான் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றும் உண்மையிலேயே ஒப்பந்தம் கிரையத்திற்காக ஏற்பட்டது இல்லை என்றும்முந்தைய கடனுக்காக வற்புறுத்தலின் பேரில் ஒப்பந்தம் எற்பட்டது என்றும் கிரைய ஒப்பந்தம் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோர வாதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.20 16:01:16 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

OS.NO. 79 / 2021

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | : | 3 |
| பெயர் | : | **செல்வம்** |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை:**

நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன். விவசாயவேலை செய்கிறேன். அப்துல்காதர் எங்கள் ஊரில் மீன்வியாபாரம் செய்கிறார். அவரை சுமார் 10 ஆண்டுகளாக எனக்கு தெரியும். சக்திவேல் உள்ளுர்காரர். அவர் எனக்கு அதிகமாக பழக்கம்இல்லை. பார்த்திருக்கிறேன். 2019 மார்ச் 15ம் தேதியன்று அப்துல்காதர் சக்திவேலிடமிருந்து 10,10,000/-க்கு கிரையம் வா ங்குவதாக பேசி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது அந்த ஒப்பந்தத்தில் நானும் மற்றொரு நபரும் சாட்சி கையொப்பம் போட்டோம். அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை. பத்திரம் பதிவு செய்த பிறகு வெளியில் வந்து பணம் கொடுக்கப்பட்டது. 10லட்சம் ரூபாய் பணம் கொடுத்தார்கள். வா.சா.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம்போட்டது நான் தான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

வழக்கு பற்றிய முழுவிபரமும் எனக்கு தெரியும். பத்திர அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்தபிறகு வெளியில் வந்து பணம் கொடுக்கப்பட்டது. வாதியின் மகன் பெரோஸ்கான் எனக்கு தெரியாது. அவர் காவல்துறையில் காவலராக பணிபுரிவதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் சரத்துக்களை நான் படித்துப்பார்க்கவில்லை. அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி சக்திவேல் வாதியின் மகனிடம்ட பணம் கடன்வாங்கியிருந்தார் என்றும் அந்த கடன் தொகைக்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது அடையாள அட்டை நான் நீதிமன்றத்தில் த ாக்கல் செய்ய தயாராகவுள்ளேன். வாதியின்

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.09.20 16:01:22 +0530

மகன் பெரோஸ்கானும் அவரது நண்பன் அஜ்மீரும் காவல்துறையில் பணிபுரிவதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.20 16:01:28 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை